உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—௪௨.] பார்த்திப-ஹு ஆனி,ஆடி௴ [பகுதி—௮, ௯.

Vol. 42. June-August 1945 No. 8, 9.

உள்ளுறை.

| | | |
|---|---|---|
| நேசநாட்டார்வெற்றி:— | T. K. இராமாநுஜையங்கார், | ௧௧௩—௧௧௫ |
| ஒருதுறைக்கோவை யாராய்ச்சி:— | உதவிப்பத்திராசிரியர் | ௧௧௫—௧௧௮ |
| கல்வெட்டுக்களில் நாட்டோடு இணைத்து வழங்கப்பெறும் எண்கள்:- | ஸ்ரீ. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள் | ௧௧௯—௧௨௩ |
| தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:— | ... ... | ௧௨௪ |
| அணிநலன்:— | ஸ்ரீ. பண்டித. ராமசுப்பிரமணியநாவலரவர்கள் | ௧௨௫—௧௩௬ |
| திருக்குற்றாலத்தலபுராண இன்கவிவிளக்கம்:- | ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C. | ௧௩௭—௧௪௨ |
| பண்டைத்தமிழர்:— | சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர் | ௧௪௩—௧௪௮ |

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1945.

Printed by Srimathu R. SHANMUGA RAJESWARA NAGANATHA SETHUPATHY AVL., and Published by THIRU. NARAYANA IYENGAR at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—௪௨.] பார்த்திப-ஸு ஆனி, ஆடி-மீ [பகுதி—௮, ௯.
Vol. 42. June—August 1945. No. 8, 9.

## நேசநாட்டார் வெற்றி.

தேவாசுரயுத்தமும் ராமராவணயுத்தமும் பாண்டவகௌரவயுத்தமும் முதலியவை காவியங்களிலேகாணும் பெரும்போர்களாம். இவற்றுள் தேவாசுரயுத்தம் பதினெட்டாண்டும் ராமராவணயுத்தம் பதினெட்டுமாதங்களும் பாண்டவகௌரவயுத்தம் பதினெட்டுநாளும் நிகழ்ந்து முடிந்தன என்பர். இப்போர்களும் இவற்றால் நிகழ்ந்த அழிவுகளும் மிகமிக அற்பம் என்றுசொல்லும்படி 1939-ஆம் ஆண்டு தொடங்கிய ஐரோப்பியப் போரினையும் அதைத் தொடர்ந்து நிகழ்ந்த ஆசியாதேச மஹாயுத்தத்தினையும் நினையுங்கால் நெஞ்சு நடுங்குகின்றது. இவற்றுள் ஐரோப்பியப்போர் ஜர்மானியரால் மூண்டது; ஆசியாயுத்தம் ஜப்பானியரால் மூண்டது. பறக்குங்கோட்டைகள் என்று வழங்கும் விமான சாதனங்களால் உலகம் முழுவதையும் தம் அடிப்படுத்த நினைந்த ஜர்மானியர், பறக்குங்கோட்டைகளால் உலகத்தை வருத்தி வென்றுவந்த திரிபுரத்தாரை ஒப்பர். சிறியநாட்டினராயிருந்தும் தம் இடையறாமுயற்சியாலும் மதிவலியாலும் படைவலியாலும் பிறர்நிலங்கொள்ளத்துணிந்த ஜப்பானியர், சிறுதீவாகிய இலங்கையாட்சியுடையராயிருந்தும், தம் தவவலியாலும் தாள்வலியாலும் தோள்வலியாலும் உலகம் முழுவதையும் வென்ற இராவணாதியரை ஒப்பர். இவர்கள் அழிவும் இதனை வலியுறுத்துகிறது. திரிபுரவீரர்

ஆனிமாதத்தே வீழ்ச்சியுற்றனர் என்பர். ஜர்மானியர் தோல்வியின்முடிவும் ஆனிமாதத்தொடக்கத்திலே. இராவணுதியர் ஆடிமாதத்தே தோல்வியுற்றனர். ஜப்பானியர்தோல்வியுற்றதும் ஆடிமாதத்திலேதான்.

இந்த உலகமஹாயுத்தத்திலே ஜர்மானியரும் இட்டாலியரும் ஜப்பானியரும் ஒன்றுபட்டு அச்சுநாட்டினர் என்று வழங்கும் ஒரு கட்சியாராகி உலகத்தைநெறிதிறம்பி அலைப்பாராயினர். உலகினுள்ள பிற பேராசரும் சிற்றாசருமாகியவருள்ளே பெரும்பாலார் ஒன்றுபட்டு நேசநாட்டார் என்று வழங்கும் ஒருகட்சியாராய், அச்சுநாட்டினர் புரியுந்தீங்கினையொழித்தற்கு அவரை எதிர்ப்பாராயினர். அவ்வாறு எதிர்த்துவென்ற நேசநாட்டினருள்ளே பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் ருஷியரும் சீனரும் முன் எண்ணத்தக்கவராவர்.

இப்பெரும்போரின்விளைவுகளுள் பலவகைவலியும் ஒருங்குவாய்ந்தும், பலநாட்டினரையும் ஒரேகாலத்திற் பகைத்துக்கொண்டதுமன்றி இடித்துரைக்கும் (தக்காராகிய) அமைச்சர்நட்பினைக் கொள்ளாமலும் நெகிழ்ந்த ஹிட்லர் வீழ்ச்சி,

"பல்லார்பகைகொளவிற் பத்தடுத்ததீமைத்தே நல்லார்தொடர் கைவிடல்"

"இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரி லானும் கெடும்"

என்ற தமிழ்மறையை மெய்ப்பிக்கும்.

அன்றியும், இப்போரின் விளைவால் ஆக்கத்துக்குக்காரணமாய் அமையவேண்டிய விஞ்ஞான அறிவு, அழிவுக்கு எவ்வளவு காரணமாயிருந்ததென்பதும், உயர்ந்த படைக்கலமுதலிய சாதனங்கள் தகுதியற்றவர்க்குவாய்த்தால் அதனல் உலகிற்குவிளையும் கேடு எத்தகையதென்பதும் நன்கு புலனுயின. இவ்வாறு தீயவர்வசப்பட்ட விஞ்ஞான அறிவின்விளைவால் உலகம் நாசமடையும் என்று கண்டே நம்முன்னேர் அவ்வறிவினல் பெரிதும் ஆற்றல்வாய்ந்த படைக்கலம் முதலியவற்றையாக்கிக்கொள்ளும் முறைகளைக்கூறும் அதர்வவேதத்திற் பல பகுதிகளை மறைத்துவிட்டனர்போலும்.

இப்பெரும்போரில் நேசநாட்டினர் வெற்றியடையவேண்டு மென்றுவிரும்பிய நாம் அவர்கள் பரிபூரணவெற்றியடைந்தது பற்றிப் பெரிதும் மகிழ்கிறோம். இப்போரால் உலகம் அடைந்த இன்னல் இனி என்றும் நேராதவாறு இறைவன் அருள்புரிக.

"அறந்தலை யெடுக்க, வேதம் அருள்சுரந் தறைந்த நீதித்
திறந்தெரிந் துலகம் பூணச் செந்நெறி செலுத்தித் தீயோர்
இறந்துக நூறித் தக்கோ ரிடர்துடைத்" தெங்கும் இன்பம்
நிறைந்திட, நேச நாட்டார் நிலவுல காண்டு வாழி.

வாழி யுலகுவளம் வாய்ப்ப வலங்கொண்ட
ஆழி நெடுமால் அருளுதலால்—ஊழிபல
மாருத வென்றி மகிழ்ச்சிமிக வையமிசை
ஆற வதுஜார் ஜாசு.

உதவிப்பத்திராசிரியர்.

---

# ஒருதுறைக்கோவையாராய்ச்சி

[ககஉ-ஆம் பக்கத்தொடர்ச்சி]

'பூவளர் வாவிக் கமலமும்' என்ற முதற்குறிப்புடைய செய்யுள், அச்சுப்புத்தகங்களெல்லாவற்றிலும் 537-ஆம் ஓலைச்சுவடியுள்ளும் இந்நூலின் 58-ஆம் செய்யுளாகக் காணப்படுகிறது. 490-ஆம் ஓலைச்சுவடியுள் அது 59-ஆம் செய்யுளாக உளது. இச்செய்யுளின் மூன்றும் அடி 490-ஆம் ஓலைச்சுவடியில்,

'கோவளர் தானத் திளங்கன்று சேர்கை குறித்தமைத்தீர்' என்றும், மற்றப்பிரதிகளிலே,

'கோவளர் தானத் தினங்கன்று சேர்கை குறித்தமைத்தீர்' என்றும் ஓரெழுத்துருமாறி வேறுபட்டுக் காணப்படுகிறது.

உரைப்புத்தகத்துள்ளே பிற்குறித்த பாடங்கொண்டு 'கோவளர் தானத்தின் அம் கன்று சேர்கை குறித்து அமைத்தீர்' என்று பிரித்துப் 'பசு இருக்குமிடத்தில் அழகிய கன்றும் சேர்ந்திருத்தலைக்கருதி அவ்வாறு அமைத்தீர்' என்று செம்பொருளும், 'கோ - கண். கோ வளர் தானம் - கண் இருக்குமிடம். அம் கன்று சேர் கை - அழகிய வளையல் பொருந்திய கை' என்று

குறிப்புப்பொருளும் விரிக்கப்பட்டன. இங்கே அம் என்ற அடைமொழி கொண்டு கன்று விசேடிக்கப்பட்டது. முற்குறித்தபாடம் கன்று இளங்கன்றென்று குறித்தது. இரண்டுபாடத்திலும் கன்றுக்கு வழங்கிய அடைமொழி வேறுபட்டதன்றி அவ்வடிப்பொருள்கள் வேறுபடவில்லை. எனினும், கன்றினை 'அம் கன்று' என வழங்குவதினும், 'இளங்கன்று' என வழங்குதலே ஏற்புடைத்தாதலின் முற்குறித்த பாடம் சிறக்கும். குறிப்புப்பொருளுரைக்குமிடத்து 'இளங்கன்றுசேர் கை' என்பதனை இளம் கை, கன்று சேர் கை எனப் பிரித்துக்கூட்டி, 'இளைதாகிய (முற்றி வலியதாகாத=மெல்லிய) வளையணிந்த கை' யென உரைக்க.

பாட்டுடைத்தலைவன்பெருமைகூறும் 66-ஆம் செய்யுளின் முன்னிரண்டடிகள், அச்சுப்பிரதிகளெல்லாவற்றிலும் 537-ஆம் ஓலைச்சுவடியுள்ளும்,

> 'முன்னீர் சொரிமுத்த மாணிக்க ராசி முகந்தருவி
> நன்னீர் சொரிகந்த மாதனத்தான்' *

என்று காணப்படுகின்றன. 490-ஆம் ஓலைச்சுவடியுள் இங்கே குறித்த முதலடியின் இரண்டாஞ்சீர், 'சொரிமுத்தின்' என்று வரையப்பட்டுளது.

அச்சுப்புத்தகத்துள் இவ்வடிகளுக்குக் 'கடல்சொரிகின்ற முத்தின் தொகுதியையும் மாணிக்கத்தொகுதியையும் அருவிநன்னீர் மொண்டுசொரிகின்ற கந்தமாதனத்தையுடையவன்' என்று பொருளுரைக்கப்பட்டுளது.

இவ்வுரை, 'சொரிமுத்தம்' என்று முதலிற்குறித்த மூலபாடத்தோடியைவதெனினும், 'முன்னீர்சொரி' என்ற அடைமொழித்தொடர், 'முன்னீர் சொரிமுத்தம்,' 'முன்னீர்சொரிமாணிக்கராசி' என முத்துடனும் மாணிக்கத்துடனும் இயைத்துக்கொள்ளநின்று, மலையருவிசொரியும் மாணிக்கத்தைக் கடல்சொரிவதாகக்கொண்டு மயங்குதற்கும் ஏதுவாகும்.

490-ஆம் சுவடியில் உள்ளவாறு, 'முன்னீர் சொரிமுத்தின்' என்று பாடங்கொள்ளின் அவ்வாறு மயங்குதற்கிடனின்றி, அவ்வடிகள், நெய்தலும் குறிஞ்சியும் அணியவாய் இயல்பான் மயங்கிய திணைமயக்கங்கூறுவனவாய்க் 'கடல் சொரிந்த முத்தக்குவியலின்கண் நன்னீரருவி மாணிக்கராசியை முகந்துசொரிகின்ற கந்தமாதனவரையினையுடையான்' என்று பொருள் பயந்து, முத்துமுதலிய கடல்வளமும் மாணிக்கமுதலிய மலைவளமும் ஒருங்குடையான் எனப் பாட்டுடைத்தலைவன்பெருமையை இனிது விளக்குவனவாம்.

---

* இது, 490-ஆம் ஓலைச்சுவடியில்மட்டும் 67-ஆம் செய்யுளாக உள்ளது.

அன்றியும் 'முத்தின்' என்றபாடத்துக்கே, 'முத்தம்' என்று பாடங் கொண்டு கூறியவாறு, 'முன்னீர்சொரிந்த முத்தினோடு (தன்) மாணிக்கராசி யையும் நன்னீரருவி முகந்துசொரிகின்ற கந்தமாதனவரையினையுடையான்' என உரைகூறலும் அமையும்.

ஆதலின், 'முன்னீர் சொரிமுத்தின்' என்ற பாடங்கொண்டு அதற் கியைப் பொருளுரைப்பதே சிறப்புடையதாகுமென்று தோன்றுகிறது.

"நல்லார் நகைக்கு மனைவளர் தாளி நனைமலரு மல்லார் கரந்தை"

என்பது இந்நூலின் 68*ஆம் செய்யுளின் முற்பகுதியாகும். இப்பகுதி பாட்டுடைத்தலைவனது கரந்தைநகர்ச்சிறப்பினை விளக்குவது.

உரைப்பதிப்புள் 'நல்லார் நகைக்கு மனை' என்பதனை 'நல்லார் நகைக் கும் மனை' என்று பிரித்து, இவ்வடிகளுக்கு, 'மாதர் பெருங்களிப்பாற் சிரித்து விளையாடுகின்ற வீடுகளில் விருத்தியடையகிற்கிற தாளிக்கோடிகளின் அரும்புகள் மலர்கின்ற வளம்பொருந்திய கரந்தைநகர்' என்று பொருள் விரிக்கப்பட்டுளது.

இவ்வாறுகொள்ளின், 'நல்லார்நகைக்கும் மனை' என்பதனுள் மனை விசேடியமாகவும், 'நல்லார்நகைக்கும்' என்பது விசேடணமாகவும்வேண்டும். மனையைச் சிறப்புக்கருதி விசேடிக்குமிடத்து 'நல்லார்மகிழும்மனை', 'நல்லார் விழையும்மனை', 'நல்லார்நயக்கும்மனை' என்று இன்னோரன்னவாய்பாட்டாற் கூறுவதே அமைவுடையதாகும். அன்றி, 'நல்லார்நகைக்கும்மனை' என்று கூறுவது அமைவுடையதாகாது.

மேலும், 'நல்லார்நகைக்கும்மனை' என்பது, 'மகளிர் (அல்லது நல் லோர்) பரிகசித்து இகழ்ந்துபேசும் மனை' யென்று பொருள்தந்து, கவிகருத் தொடுமாறுபட்டுப்பாட்டுடைத்தலைவனதுகரந்தைநகர்மாளிகைகளை இகழ்ந்து கூறுங்கூற்றாதலும் கூடும்.

ஆதலால், 'நல்லார்நகைக்கும் மனை' யென்று பிரித்துப் பொருள்கொள் ளாது, மூலத்தில் உள்ளவாறே 'நல்லார் நகைக்கு, மனைவளர் தாளிநனை மல ரும் மல்லார்கரந்தை' யென்றுகொண்டு, 'மகளிர்நகையால், வீடுகளில் வளர் கின்ற முல்லைக்கொடிகளிலரும்புகள் மலர்கின்ற வளமுடைய கரந்தைநகர்' என்று, அல்லது நல்லார் என்பதனை மீட்டும் கூட்டி 'நல்லார்நகைக்கு நல் லார்மனைவளர்தாளிநனை மலரும் மல்லார்கரந்தை' என்றுகொண்டு, 'மகளிர்

---

* இது 490-ம் ஓலைச்சுவடியுள் 69-ஆம் பாடலாக உளது.

நகையால், அவர்மனையின்கண்வளர்கின்ற அல்லது அவரால் மனையின்கண் வளர்க்கப்படுகின்ற முல்லைக்கொடிகளிலரும்புகள் மலர்கின்ற வளமுடைய கரந்தை' என்று பொருளுரைப்பதே பொருந்துவதாகும்.

நல்லார்—(இங்கே) பெண்கள். நகை - சிரிப்பு. நகைக்கு என்பதனுள் குவ்வுருபு ஆல் என்னும் மூன்றனுருபின் ஏதுப்பொருள்தங்குநின்றது. தாளி— முல்லை. மனைவளர்தாளியென இயைக்க. தாளியென்பது ஒருவகைமரம் அல்லது ஒருவகைக் கொடியினைக்குறிக்குமெனினும், மனையின்கண்வளர்த லும் மகளிர்நகையால் மலர்தலும் கொண்டு இங்கு முல்லைக்கொடியென்று கொள்ளத்தக்கதாயிருக்கிறது.

கற்புநெறிநிற்றற்குரியமகளிர் முல்லையினைவளர்த்தலும் முல்லைமலர் சூடுதலும் மரபு. 'அல்லியங் கோதைமாதர் அன்பொடு வளர்த்த முல்லை' என்னும் நைடதச்செய்யுள் (நாட்டுப்படலம் 18) மகளிர் முல்லைக்கொடி வளர்த்தலை விளக்கும். 'முல்லைசான்ற கற்பின் மெல்லியல்' என்ற சிறுபா ணாற்றுப்படையடியும், அவ்வடிக்குக் 'கற்பின்மிகுதிதோன்ற முல்லைசூடுதல் இயல்பு' என்று நச்சினார்க்கினியர் எழுதியவுரையும் மகளிர் முல்லைசூடுதலை விளக்குவனவாம்.

முல்லை மனையின்கண் வளர்தல், 'இல்வளர்முல்லை', 'மனைவளர்முல்லை' (சு, 27; கரு 120) என்னும் சிலப்பதிகார அடிகளாலும், 'முகைகாட்டிய முன்றின்முல்லை' (54) என்னும் இந்நூற்செய்யுளாலும் விளங்கும்.

முல்லை மகளிர்நகையால் மலருமென்பது, 'ஏடவிழ் மகிழ்சுவைக்க' என்று தொடங்கும் சூடாமணிநிகண்டுப்பாடலில் (கஉ-108) 'தேம்படி முல்லை நகைக்க' என வருவதுகொண்டு அறியலாம்.

'மகளிர்நகையினால் மனையின்கண் வளர்கின்ற முல்லைக்கொடியிலரும்பு கள் மலர்கின்ற வளமுடைய கரந்தை' என்று பிற்குறித்த பொருளால், மழை வளந்தரும் கற்புடைமகளிர்வாழும் மாளிகைகள் நிறைந்தது - என்று பாட் டுடைத்தலைவனது கரந்தைநகர்ச் சிறப்பு இனிது விளங்கும்.

[தொடரும்]

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

உ

# கல்வெட்டுக்களில் நாட்டோடு இணைத்து வழங்கப்பெறும் எண்கள்

பண்டைத்தமிழ்மக்களின் சிற்பக்கலைக்கும் ஓவியக்கலைக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இக்காலத்தில் தஞ்சைமாநகரில் நிலவுகின்ற 'இராசராசேச்சுரம்' என்ற திருக்கோயிலை எடுப்பித்தவனும் சிவ பாதசேகரன் என்ற சிறப்புப்பெயர் எய்தியவனும் ஆகிய முதல் இராசராசசோழனது கல்வெட்டுக்களிலே காணப்படும் மெய்க் கீர்த்தியில்,

'இரட்டபாடி ஏழரையிலக்கமும்' *
'முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரமும்'

என்ற தொடர்கள் பயின்றுவருதலை வரலாற்று ஆராய்ச்சியாளர் யாவரும் அறிவர். அங்ஙனமே,

கங்கபாடி தொண்ணூற்றாறாயிரம்
நுளம்பபாடி முப்பத்தீராயிரம்
வனவாசி பன்னீராயிரம்
இடைத்துறைநாடு இரண்டாயிரம்
வேங்கைநாடு ஆறாயிரம்

என்று முற்காலத்தில் வழங்கப்பெற்றுவந்தமை கல்வெட்டுக்க ளாலும் செப்பேடுகளாலும் அறியக்கிடக்கின்றது.

---

* 'பிரட்டனை யேபட்டங் கட்டழித்துப் பேரே ழரையிலக் கம்புரக்க
இரட்டனை யேபட்டங் கட்டிவிட்ட இராசகம் பீரனை வாழ்த்தினவே'

என்ற தக்கயாகப்பரணிச்செய்யுளிலும்,

' ... ... ... ஏழரை யிலக்கமு மிரியச்
சீறிய அபயன் குலோத்துங்க சோழன் உருட்டுக சிறுதேரே'

என்ற குலோத்துங்கசோழன்பிள்ளைத்தமிழ்ச்செய்யுளிலும் இது பயின்று வருதல் காண்க.

இத்தொடர்களின் பொருளை ஆராயத்தொடங்கிய அறிஞர்கள் வெவ்வேறு கருத்துக்களை வெளியிடுவாராயினர். ஒருசாரார், அவ்வெண்கள் அவ்வந்நாட்டில் அடங்கியிருந்த ஊர்களின் தொகையாகும் என்றனர். மற்றொருசாரார், அவை, நாட்டின் வருவாயையுணர்த்தும் என்றுரைத்தனர். பிறிதொருசாரார், அவை, நாட்டிலுள்ள குடிகளின்தொகையைக் குறிக்கும் என்று கூறினர். எனவே, அவ்வெண்கள் எதனை உணர்த்துகின்றன என்பது இதுகாறும் ஒருதலையாகத் தெளிவுறுத்தப்படவில்லை.

ஒருநாட்டின் வருவாயும் குடிகளின்தொகையும் ஆண்டுதோறும் மாறிக்கொண்டேபோகும் இயல்புடையனவாகும். ஆதலால், அவ்வெண்கள் நாட்டின் வருவாயையாதல் குடிகளின் தொகையையாதல் குறிக்கும் என்றுகொள்வது எவ்வாற்றானும் ஏற்புடையதன்று.

வடவிமயம்முதல் தென்குமரிகாறும் பரந்துகிடக்கும் நம் இந்தியாவிலுள்ள ஊர்களின் தொகையே ஏழரையிலக்கம் என்று சொல்லப்படுகிறது. இங்கிலையில், பம்பாய்மாகாணத்தின் தென்பகுதியும் நைசாம் இராச்சியத்தின் மேல்பகுதியும் தன்னகத்துக்கொண்டு நிலவிய மேலைச்சளுக்கியநாடாகிய இரட்டபாடிநாடு மாத்திரம் ஏழரையிலக்கம் ஊர்களைத் தன்பாற்கொண்டதாக இருத்தல்வேண்டும் —என்று கொள்வது எங்ஙனம் பொருந்தும்?

ஆகவே, மேலே எடுத்துக்காட்டப்பெற்ற முத்திறக்கொள்கைகளும் வலியுடையனவாகாமை காண்க.

இனி, திருக்கோவலூரில் திருமால்கோயிலிற் காணப்படும் கல்வெட்டொன்று அவ்வெண்களின் பொருளை ஓரளவு உணர்ந்துகோடற்கு உதவுகின்றது. அது,

'ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் மருவிய செங்கோல் வளரத்
தன் திருத்தமயனொடும் போய் இரட்டபாடி ஏழரை
யிலக்கமுங்கொண்டு கொல்லாபுரத்து ஜயஸ்தம்பம்
நாட்டி மீண்டுபோந்து போராற்றங்கரைக் கொப்பத்து

ஆகவமல்லனை யஞ்சுவித்து அங்கவன் ஆனையும் குதிரையும் பெண்டிர் பண்டாரமும் கைக்கொண்டு விஜயாபிஷேகமும்செய்து வீரசிம்மாசனத்து வீற்றிருந்தருளிய கோப்பரகேசரிவன்மரான உடையார் ஸ்ரீ இராஜேந்திர தேவர்க்கு யாண்டு ஆறுவது மிலாடான ஜனநாதவளநாட்டுக் குறுக்கைக்கூற்றத்துப் பிரமதேயம் திருக்கோவலூரான ஸ்ரீ மதுராந்தகச்சதுர்வேதிமங்கலத்துத் திருவிடைக்கழி ஆழ்வார் ஸ்ரீவிமானம் முன்பு இட்டிகைப் படையாய்ப் பலகைப் பிளந்தமைகண்டு பார்க்கவவம்சத்து மிலாடுடையார் இரணகேசரி இராமரான நரசிங்கவன்மர் கோயிலை இழிச்சிக் கருங்கற்கொண்டு ஸ்ரீவிமானமும் மண்டபமும் எடுப்பித்துப் பூரணபொற்குடம் அஞ்சு வைப்பித்துத் திருச்சுற்றுமாளிகையும் முன்பில் மண்டபமும் எடுப்பித்து முத்துப்பந்தலுங்கொடுத்து முன்பு கல்வெட்டுப்படியுள்ள நிபந்தங்கள் எல்லாம் இந்த ஸ்ரீவிமானத்தே கல்லுவெட்டுவித்தார் நரசிங்கவன்மரென்று அபிஷேகம்பண்ணி முடிகவித்து மிலாடு இரண்டாயிரம் பூமியும் ஆண்ட மிலாடுடையார் நரசிங்கவன்மர். நரசிங்கவன்மர் சந்திராதித்தவல் எரிக்கவைத்த திருநுந்தா விளக்கு இரண்டு. இவைக்கு விளக்கெரிக்கக்கொடுத்த சாவா மூவாப் பெரும் பசு அறுபத்துநாலு' [1]

என்பதாம்.

இக்கல்வெட்டில் 'மிலாடு இரண்டாயிரம் பூமியும்' என்று காணப்படும் ஓர் அரியசெய்தி ஈண்டு அறியத்தக்கது.

மிலாடு என்பது மலாடு என்ற நாட்டைக் குறிப்பதாகும். மலாடு என்பது மலையமான்நாடு என்ற தொடரின் மரூஉவாகும். இந்நாடு, திருக்கோவலூரைத் தலைநகராகக்கொண்டு பண்டைக்காலத்தில் விளங்கியது. இது செந்தமிழ்நாட்டைச் சூழ்ந்திருந்த பன்னிரண்டு கொடுந்தமிழ்நாடுகளுள் ஒன்று என்பது உரையாசிரியர்கருத்து.

[1] Epigraphia Indica Vol. VII, No. 19 K

கடைச்சங்கநாளில் இந்நாடு கடைபெழுவள்ளல்களுள் ஒருவனாகிய மலையமான் திருமுடிக்காரிக் குரியதாயிருந்தது என்பது புறநானூற்றால் அறியப்படுகின்றது.[1] சிவனடியார் அறுபத்துமூவருள் ஒருவராகிய மெய்ப்பொருள்நாயனார் ஆண்ட நாடும் இதுவேயாம்.

இத்துணைத் தொன்மைவாய்ந்த இந்நாடு இரண்டாயிரம் பூமிகளையுடையதாயிருந்தது என்று திருக்கோவலூர்க்கல்வெட்டு உணர்த்துவதால் நாட்டுடன் இணைத்துவழங்கப்பெற்றுள்ள எண் அதிலடங்கியுள்ள பூமிகளின் தொகையேயாம் என்பது நன்கு பெறப்படுகின்றது. அன்றியும், மைசூர் இராச்சியத்திலே கோலார் ஜில்லாவிலுள்ள இரண்டு கல்வெட்டுக்களில்[2] 'ஜயங்கொண்ட சோழமண்டலம்[3] நாற்பத்தெண்ணாயிரம் பூமியும்' என்று வரையப்பெற்றிருத்தலால் அச்செய்தி உறுதியாதல் காண்க.

இனி, ஒரு பூமி என்பது எத்தனைவேலிகளை (அல்லது நிலத்தின் வேறு சிறுபிரிவுகளை)த் தன்னகத்துக்கொண்டது என்பது இப்போது புலப்படவில்லை. இந்நாளிலே சில ஊர்களில் உட்கிடை, பங்கு என்ற உட்பிரிவுகள் உள்ளன. இவற்றுள், ஒவ்வொன்றும் சில அல்லது பலவேலிநிலங்களைத் தன்பாற்கொண்ட ஓர் உட்பிரிவாகும். எனவே, சில அல்லது பல வேலி நிலங்களைத் தன்னகத்துக்கொண்டு நிலவிய ஒரு கிராமஉட்பிரிவிற்குப் பூமி என்ற பெயர் முற்காலத்தில் வழங்கிவந்தது என்று கொள்வதே அமைவுடைத்து.

மைசூர் இராச்சியத்திலுள்ள ஆதகூரிலிருந்து கொண்டுவரப்பட்டுப் பங்களூர்ப் பொருட்காட்சிநிலையத்தில் வைக்கப்பெற்றுள்ள ஒரு கல்வெட்டினால் ஆத்கூர் என்ற கிராமம் பன்னிரண்டு பூமிகளையுடையதாயிருந்தது என்னும் உண்மை வெளியாகின்றது.[4]

---

[1] புறம் 126.

[2] Epigraphia Carnatica Vol. X Malbagal, Nos. 49 A & 119

[3] ஜயங்கொண்டசோழமண்டலம் என்பது தொண்டைநாடாகும்.

[4] Epigraphia Indica Vol. VI, No. 6. pages 50—57

இனி, தொண்டைமண்டலமாகிய சயங்கொண்டசோழமண்டலம் இருபத்துநான்குகோட்டங்களையும் எழுபத்தொன்பதுநாடுகளையும் ஆயிரத்துத்தொளாயிரம் நத்தங்களையும் முற்காலத்தில் தன்னகத்துக்கொண்டு விளங்கிற்று என்பது,

'கோட்டமோ ரிருபா னன்கு கூறுநா டெழுபத் தொன்பான்
தோட்டெழி லாயிரத்துத் தொளாயிர நத்த மாகும்'[1]

என்னும் பழையபாடல் ஒன்றால் அறியக்கிடக்கின்றது.

சயங்கொண்டசோழமண்டலம் நாற்பத்தெண்ணாயிரம் பூமிகளையுடையதாயிருந்தது என்பது முன்னர் விளக்கப்பட்டது. எனவே, ஆயிரத்துத்தொளாயிரம் நத்தங்களையுடைய சயங்கொண்டசோழமண்டலம் நாற்பத்தெண்ணாயிரம் பூமிகளையுடையதாயிருந்தமை ஈண்டு அறியத்தக்கது. இதனால் ஒருகிராமம் சற்றேறக்குறைய இருபத்தைந்து பூமிகளைத் தன்பாற்கொண்டு சயங்கொண்டசோழமண்டலமாகிய தொண்டைமண்டலத்தில் முன்னாளில் இருந்திருத்தல்வேண்டும் என்பது நன்குபுலப்படுகின்றது.

இவற்றையெல்லாம் ஆராய்ந்துபார்க்குமிடத்து, ஒருபூமி என்பது இரண்டுவேலிமுதல் பத்துவேலிவரையிலுள்ள ஒரு நிலப்பரப்பாக அக்காலத்தில் இருந்திருத்தல்வேண்டும் என்று கொள்ளலாம்.

இதுகாறும் கூறியவாற்றாற் கல்வெட்டுக்களிலே நாட்டோடு இணைத்து வரையப்பெற்றுள்ள எண்கள் பூமியைக்குறிக்கும் என்பதும், ஒரு பூமி என்பது சிலவேலிநிலங்களைத் தன்னகத்துக்கொண்ட ஒரு நிலப்பரப்பாயிருத்தல்கூடும் என்பதும் நன்குவிளங்குதல் காண்க.

T. V. சதாசிவபண்டாரத்தார்,
ஆசிரியர், அண்ணாமலைபல்கலைக்கழகம்.

---

[1] எழுபது உரைமேற்கோள்-பக்கம் 51.

# தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் தாருண-௵ பங்குனி-௴ 23, 24, 25 (1945-ம் ௵ ஏப்ரல்-௴ 5, 6, 7)ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் தேறி யோக்கியதாபத்திரம் பெறும் மாணுக்கர்களின் அபிதானபத்திரம்.

## பண்டிதபரீக்ஷை.

| தொடர் எண். | பதிவு எண். | 2-வது வகுப்பு. |
|---|---|---|
| 1 | 10 | அ. கந்தையா, வீமன்காமம், தெல்லிப்பழை, யாழ்ப்பாணம். |

## பாலபண்டிதபரீக்ஷை.

| | | 2-வது வகுப்பு. |
|---|---|---|
| 1 | 35 | வே. காந்தி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. |
| 2 | 36 | ந. ரா. சுந்தரராசன், புலவர் இரண்டாம் ஆண்டு, கரந்தைப் புலவர்கல்லூரி, கருந்தட்டாங்குடி, தஞ்சை. |

## பிரவேசபரீக்ஷை.

| | | 2-வதுவகுப்பு. |
|---|---|---|
| 1 | 39 | K. வெள்ளைச்சாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை |
| 2 | 41 | K. சேதுராமலிங்கம், ஷை ஷை |
| 3 | 40 | A. ஆதிமூலம், ஷை ஷை |

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
26—7—'45.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனுதிபதி.

௨

# அணி நலன்

[திருவாளர். பண்டித. இராமசுப்பிரமணியநாவலரவர்கள்]

உவமைமுதலிய செய்யுட்கள் அணியெனப்பட்டுச் செய்யுட்கு அழகுபயப்பனவாயுள்ளன என்ப. ஆயினும், அணிகளெல்லாம் செய்யுளின் பொருள்புலப்பாட்டிற்காகப் புலவர்களால் வழங்கப்படுவனவே. அவை பொருட்போக்கினுற் பயில்வார்க்கு ஒருவகையின்பத்தையும் அளித்துச்செய்யுட்பொருளைப் பொலிவுறக் காட்டி நிற்றலின், பிற்காலத்தோர் அவற்றை அணியெனக் கூறலாயினர். செய்யுளை அணங்காகவும் உவமை முதலியவற்றை அவ்வணங்கின் அணிகளாகவும் கூறுவது இயல்பு. நிகழ்ந்ததொருபொருளை நிகழ்ந்தவாற்றுனே உறுதியும் தெளிவும் படக் கூறின், பிறஅணிகள் வேண்டப்படுவனவல்ல. நிகழ்ச்சியை மெய்ம்மையின் விளக்குறுத்துதலும் பொருளைப் பொலிவித்துக்காட்டுதலின், அதனைத் தன்மையணி என்ப. நிகழ்பொருளை நிகழ்ந்தவாறே தெளிவுறக் காட்டுஞ்சிறப்பால், தன்மையணியே ஏனையவற்றினும் சிறப்புடையது எனப்படும். சீரிய தன்மையணிகள் அனைத்தும் ஓவியம் போலப் பொருளின் உண்மையைப் புலப்படுப்பன. ஆதலின், அவற்றைச் 'செய்யுளோவியங்கள்' எனலாம்.

ஓவியவினைஞர்க்குரிய துகில் புலவர்க்குச் செய்யுளாம்; எழுதுகோல் உள்ளம்; நிறம் பொருட்பொலிவும் நயமும் அமைந்த சொற்கள்; வடிவம் செய்யுளிற்போந்த திரள்பொருள். ஓவியங்கள் கட்பொறியான்மட்டும் உணரப்படுவன. செய்யுளோவியம் எழுதப்படுதலிற் கட்பொறியானும் கேட்கப்படுதலிற் செவிப்புலனானும் அறியப்படுவது. நிகழ்ந்ததொருவரலாற்றை அல்லது பொருளை ஓவியன் ஓவியத்து வரைந்து பிறர்க்குத் தான்கண்டவாறே

உணர்த்துகின்றான்; புலவன் செய்யுளில் அமைத்து உணர்த்துகின்றான். ஆதலின், பொருளை உணர்த்துதலாகிய பயனால் இவையிரண்டும் தம்முள் ஒக்கும். நிகழ்பொருட்டன்மைவடிவொடு பலபல நிறங்களைத் தீட்டி ஓவியன் புனைவதுபோன்று புலவனும் பொருட்பொலிவுற உவமைமுதலியவற்றாற் செய்யுளோவியத்தை அணிவிக்கின்றான். தாம் நுகர்ந்து அறிந்தவொருபொருளைப் பிறர்க்கு உணர்த்துவதே ஓவியம் செய்யுள் ஆகிய இவற்றின் முதற் பயனும்.

கண்ணகிபட்ட துயரையும் அதனால் அவள் கோலம் இழந்திருந்தமையையும் பிறர்க்கு எடுத்துப் புலனாக்கவிரும்பிய இளங்கோவடிகள்,

"அஞ்செஞ் சீறடி யணிசிலம் பொழிய
மென்றுகி லல்குன் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்
மங்கல வணியிற் பிறிதணி யணியாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகஞ் சிறுவியர் பிரியச்
செங்கய னெடுங்கண் அஞ்சன மறப்பப்
பவள வாணுதல் திலக மிழப்பத்
தவள வாணகை கோவல னிழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி"

இருந்தனள் என்றனர். இதைக் கற்குமாத்திரத்தானே கண்ணகி சிலம்பு முதலிய அணியிழந்தமையும், குங்குமமெழுதப்படாது வறிது கிடந்த அவளுடைய கொங்கைகளினிலைமையும், அணியின்மையின் வாளா வடிந்துவீழ்ந்துகிடந்த காதுகளினிலைமையும் முதலியன கற்போருள்ளத்தினும் நிழலிட்டு அவளது துயரத்தோற்றத்தை நன்குவிளக்குகின்றன. எனவே, அவளது துன்பத்தோற்றம்

உட்கண்ணிற்கு ஓவியமாய்க் காட்சிபயக்கின்றது. செய்யுளோவியங்கள் அனைத்தும் உட்கண்ணால் நுகரப்படும் ஓவியங்களென்க.

ஓவியனது உள்ளமும் புலவனது கருத்தும் பொருணுணுக்கவுணர்ச்சியில் ஒருபான்மைப்படுவனவாம். அவர்தம் கருத்தை அமைக்கும் இடம் ஒன்றேவேற்றுமையுறுவது. ஓவியன் தன்கருத்தைத் துகிலின்கண் பதியவைக்கின்றனன்; புலவன் செய்யுளிற் படிவிக்கின்றனன். நினைவாற்றல் புனைவாற்றல் முதலியன இருவர்க்கும் உடங்கு வேண்டப்படுவன.

பொருளும் கவினும் ஓவியமுழுவதிலும் பரந்து ஒழுகுதலின், அதன் ஒருபகுதியைமட்டும் சுட்டின் அவை உணரப்படா. செய்யுளினும் அவை யாண்டும் பரந்து ஒழுகுதலின் ஓரிடத்தான் உணரப்படா. இரண்டொருசெய்யுட்களைமட்டும் ஆய்ந்துநோக்கின், காப்பியத்தின் சுவைத்தொகுதி இனிது அறியப்படாமைபோலச் செய்யுளின் திரண்டசுவை அதன் ஓரடியீரடிகளால்மட்டும் விளங்குவதில்லை.

'எம்பிரான்கண்ணினின்றும் குருதி ஒழுகியதுகண்ட கண்ணப்பர்கையிற்சிலை தானே வீழ்கின்றது; பள்ளித்தாமம் தலையினின்றும் வீழ்கின்றது; அவர் (குருதிகண்டுஆற்றாது) நிலத்தின்கண் நடுங்கி வீழ்கின்றனர்' என்னும் நிகழ்ச்சியை ஓவியத்தில் அமைத்தாற்போன்று விளக்குகின்றது,

'வந்தவர் குருதி கண்டார் மயங்கினர் வாயி னன்னீர்
சிந்திடக் கையி லூனுஞ் சிலையுடன் சிதறி வீழக்
கொந்தலர் பள்ளித் தாமம் குஞ்சிநின் றலைந்து சோரப்
பைந்தழை யலங்கன் மார்பர் நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்'

(பெரியபுராணம்)

என்னுஞ் செய்யுளோவியம்.

'குட திசைக் கொண்டு கொழும்புனற் காவிரி
வடபெருங் கோட்டு மலர்ப்பொழி னுழைந்து
காவதங் கடந்து கவுந்திப் பள்ளிப்
பூமரப் பொதும்பர்ப் பொருந்தி யாங்கண்
இறுங்கொடி நுசுப்போ டினைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல் குறும்பல உயிர்த்து
முதிராக் கிளவியின் முள்ளெயி றிலங்க
மதுரை மூதூர் யாதென வினவ' (சிலப்பதிகாரம்)

என்னுஞ் செய்யுளோவியம் கண்ணகியின் இரங்கத்தக்க நிலைமையைச் செவ்வனம் தெளிக்கின்றதன்றோ? பொருணிகழ்ச்சிக்குரிய உறுப்பினர்க்கு உண்டாகிய மெய்ப்பாடுகளை இருவகை ஓவியங்களும் நன்கு தெரிக்கின்றன.

' ... ... —மணிகண்டு
தாழ்ந்த குடையன் றளர்ந்த செங்கோலன்
பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுள்'

என்னுஞ் சிலப்பதிகார அடிகள் கோவலன்மாட்டு நிகழ்த்தப்பெற்றது கொடுங்கோன்மை என்பதனை உணர்ந்த பாண்டியனுடைய நிலைமையைக்காட்டும் ஓர் ஓவியமாம்.

உலகப் பொதுநடன அரங்கத்து நிகழும் காட்சிகளே இருவகை ஓவியங்களிலும் காணப்படுகின்றன. ஆகலின், ஓவியங்கள் ஓவியநாடகக் காட்சிகளாகவும், செய்யுட்கள் செய்யுணாடகக் காட்சிகளாகவும் கருதப்படுவன. நாடகங்களை நடிப்பக்காண்டலில் உளவாம் உணர்ச்சியும் மெய்ப்பாடும் இவ்விருவகை ஓவியநாடகங்களினும் எய்தப்படுகின்றன. நடித்தலின் நாடகக்காட்சிகள் இயக்கமுடையனவாதல்போலப் பொருளாற்றலால் இவ்வோவியங்களும்

நுட்பமாக இயங்குகின்றன. நாடகம் காண்பாருள்ளத்தை இயக்குவதுபோல இவையும் தம்மை உணர்வாரது உள்ளத்தை இயக்குகின்றன. நாடகம் பருப்பொருளவாகிய உறுப்புக்களால் நவிற்றப்படுதலின் ஆண்டு இயக்கம் புலப்படும். இவ் வோவியநாடகங்கள் நுண்ணிய பொருளியக்கத்தையுடைமையால், இயக்கம் புறக்கண்ணிற்குப் புலனாவதின்று. சிறந்த ஓவியங்களையும் செய்யுட்களையும் 'உயிருடையோவியம்', 'உயிருடைச்செய்யுள்' என விதப்பது அவற்றின் இவ்வகை நுண்ணிய இயக்கத்தை உணர்ந்தேயாமென்க.

கண்ணகி பாண்டியனிடத்துச்செல்லும்போது எய்திய வடிவு,

'மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலுங்
கையிற் றனிச்சிலம்புங் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றானக் காரிகைதன் சொற்செவியி
லுண்டளவே தோற்றா னுயிர்' (சிலப்பதிகாரம்)

என்னும் ஓவியத்தின்கண் அமைந்துகிடத்தல் காண்க. கண்ணகியின் அக்கோலங் கண்டாற்போலும் உணர்ச்சியை இவ்வோவியமே அங்கைக்கனியென அளிக்கின்றது.

தன்மையணியொடு உவமைகளைக்கூறியும் புலவர் பொருளை நன்கு புலனாக்குவர். வன்னந்தீட்டிய ஓவியம் நன்கு ஒளிர்வது போன்று உவமைகளுடன் புலனாந்தன்மைத்தோற்றங்களும் நன்கு ஒளிரும். ஈண்டுச் சில உவமைகளை ஆராய்வாம்.

'அரங்கின்றி வட்டாடியற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்' (திருக்குறள்)

என்பதனுள், 'அறைகளின்றி எங்ஙனம் வட்டாடல் இயலாதோ அங்ஙனமே அறிவுநிரம்புதற்கு ஏதுவாகிய நூல்களின்றி (நூற்கல்வியின்றி) ஒருவன் கற்றார்நடுவண் ஒன்றுகூறுதலு மியலாதாம்' என்னும் பொருண்மை விளங்கிக்கிடக்கின்றது. கல்லாதான்

ஒன்றைச் செவ்வனம்கூறுதற்கு இயலாதவன் என்னும் பொருளைக் கூறவந்த ஆசிரியர் அப்பொருளை நன்கு புலனுறுத்துதற்குரிய ஓர் உவமங்கொண்டனர். இவ்வுவமங்கூறுக்கால், இத்துணைக்குப் பொருள் உறுதியும் வலனும் தெளிவும் பெற்று ஒளிராதாமென்பது.

'கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று' (திருக்குறள்)

என்பதனுள் 'முலையிரண்டுமில்லாதாளொருத்தி பெண்டன்மையை அவாவினும் பயன்படாமைபோலக் கல்லாதான் ஒன்றைச்சொல்ல அவாவுதலும் பயன்படாது (கடைபோகாது)' என்னும் பொருள் பெறப்படுகின்றது. 'கல்லாதான் ஒன்றைச் சொல்லவிரும்புதல் கடைகூடாது' எனமட்டும் கூறியிருப்பின், மேலும் வினாவநிற்பதன்றியும் பொருள்வலன்குன்றியும் கிடக்கும். பொருளுக்கு நன்கனம் ஒத்ததோர் உவமை எடுத்துக்கொண்டபொருளின் சிறப்பிற்குக் காரணமாகின்றது. உவமத்தாற் பொருள் உள்ளத்தின்கண் நன்குபடிகின்றது. பொருளொடு முற்றொருங்கு ஒத்துச் செவ்விதரும் உவமையைமட்டும் கூறினும், பொருள் இனிதுவிளங்கிக் கிடக்குமேல், பொருளும் உவமையும் கலந்துழிப் பெறப்படும் பொருட்டெளிவுபற்றிப் புகல்வது என்?

'நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்' (திருக்குறள்)

இதனுள் 'மரக்கொம்பின் நுனிக்கட்சென்றவர் அதன்மேலும் ஏற ஊக்குவரேல், உயிர்க்கு இறுதிநேரும்' என்னும் பொருளால், 'வரம்பிறந்த ஒழுக்கத்தையுடையவர் மாய்வர்' என்னும் பிறிதொருபொருள் தோன்றிநின்றது. எனவே உவமங்களெல்லாம் பொருளைப் பொலிவுபடப் புலனுறுத்தும்பொருட்டுவருதல் பேணப்படும்.

கீழ்வருவன திருக்குறளில்வரும் சீரிய உவமைகளுட் சில.—

'உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்'

'இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்'

'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'

'மடுத்தவா யெல்லாம் பகடன்ன னுற்ற
இடுக்க ணிடர்ப்பா டுடைத்து'

'வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்த
முள்ளத் தனைய துயர்வு.'

உவமைப்பொருளைக் குறிப்பாகவைத்துப் பொருளைப் புலப்படுத்துமுறையும் புலவரான் ஏற்றபெற்றி கொள்ளப்படும்.

'வில் வணங்கிற்றாயினும் (வளைந்ததாயினும்) அவ்வணக்கம் (மேற் செய்யுங் கொலையாகிய) தீங்கினையே குறிக்கோளாக உடையது. அதுபோலப் பகைவர்மாட்டுக் காணப்படும் சொல்லின் வணக்கத்தை (சொல்லாற் புலப்படும் பணிவுடைமையை)ப் பணிவாகக் கொள்ளற்க' என்னும் பொருளமைந்த,

'சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான்'—(திருக்குறள்)

என்பது பகைவரியல்பையும் அவர்மயக்கிற்படலாகாது என்னும் பொருண்மையையும் நன்கு விளக்கிநின்றது.

உவமத்தினும் பொருள் சிறப்பநின்றுழிப் பொதுஉவமங்கள் புலவராற் றள்ளப்படும். அவ்வாறு தள்ளுமுகத்தாற் பொருளை நன்கு புலப்படுத்தலே அவாது குறிக்கோளாமென்க. 'இப் பொருள் ஒவ்வாது; இதனினும் சிறந்தது இது' எனப் பயில்வோர் உணர்வாராகலின். கீழ்வருவன இதற்கு எடுத்துக்காட்டுக்களாம்.

'பவள வுலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய' (சிலப்பதிகாரம்)

'கண் குவளையன்று; அது கண்போலும் கொடிதன்று, தண்ணிதாகலின்; நிறமாத்திரையொக்குமேனும், செயலான் இக்கண்கள் கொடிய, கொடிய' எனக் கண்ணின்கொடுமை உவமையொழிப்பாற் புலப்படுத்தப்பட்டது.

'கள்வாய் நீலங் கையி னேந்திப்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
வெள்வே லல்ல வெய்ய வெய்ய' (சிலப்பதிகாரம்)

பொருளின்றொழிலை உவமைக்கேற்றிக்கூறுவது பொருள் புலப்பாட்டையும் நயத்தையும் பயக்குமென்பது,

'தேங்குவளை தன்னிலே செந்தா மரைமலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே—ஆங்கு
மதுநோக்குந் தாரானும் வாணுதலுந் தம்முட்
பொதுநோக் கெதிர்நோக்கும் போது' (நளவெண்பா)

என்னுஞ் செய்யுளான் விளங்கும். புகழேந்திப்புலவருடைய செய்யுட்கள் சில உவமக்கண்ணடிகளாயுள்ளன.

'மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று'—(நளவெண்பா)

என்பதிற் போந்த உவமைநயம் நயக்கத்தக்கதே.

'கல்லாத் தவறுளம் புல்லிய குழல்' (கல்லாடம்)

'கல்லாத குற்றத்தையுடைய உளப்பான்மைபோலும் கூந்தல்' என்னும் பொருள்படவந்த இவ்வடிக்கண் உவமை பொருளானும்

பொருள் உவமையானும் புலப்பாடு எய்திநின்றன. கல்லாதாருளத்துப் பேதைமையிருள்போலக் கறுத்த கூந்தலெனவே, கூந்தல்போல் இருண்டதன்மை (பேதைமை)யுடையது கல்லாதாருடைய உளமென்பது விளங்கிற்று. ஆகவே, கல்லாமையது இழுக்கையும் ஒருங்கு தோற்றுவித்ததாயிற்று. இத்தகைய நுண்ணிய உவமைகள் படிப்பார்க்குக் கவர்ப்புடைய பல்வகையின்பத்தையளிக்கும் ஆற்றலுடையன.

'பழையன் வேல்வாய்த் தன்ன நின் பிழையா நன்மொழி'—(நற்றிணை) என்பதனால் பழையனதுவேல் குறிதவறுமையும் உடன்பெறப்பட்டது. 'குவளைபோலும் கண்' என்புழியும் 'கண்போலும் குவளை' என்பது பெறப்படுமாயினும், அது யாவரானும் அறியப்பட்டதன்றே? ஈண்டுப் பலரானும் அறியப்படாத பழையனது வேல்வாய்ப்பும் தோன்றுதலின், அதனினும் இது சிறப்பவந்த உவமை எனப்படும்.

> 'பெய்யாது வைகிய கோதை போல மெய்சாயினை' (நற்றிணை)

> 'முழங்குதிரை கொழீஇய மூரி எக்கர்
> நுணங்குதுகில் நுடக்கம் போலக் கணங்கொள
> ஊதை தூற்று முரவுநீர்ச் சேர்ப்ப' (நற்றிணை)

> 'குன்ற விறுவரைக் கோண்மா விவர்ந்தாங்குத்
> தந்தை வியன்மார்பிற் பாய்ந்தான்' (கலித்தொகை)

> ' ... ... முனிவன்விட்ட
> மூச்சினிற் பிறந்தி ரண்டு மோகினி மாத ராழி
> நீச்சினி னிலைத்து நிற்கு நீலமென் கொடிபோ னின்றார்'
>
> (அரிச்சந்திரபுராணம்)

என்பன பொருளொடு உயிருறப் பொருந்திக் கற்பாரை நயப்பிக்குந் திறத்த உவமைகளாம்.

களவழியிற் காணும்,

> 'கொல்யானை பாயக் குடைமுருக்கி எவ்வாயும்
> புக்கவா யெல்லாம் பிணம்பிறங்கத்—தச்சன்

வினைபடு பள்ளியிற் றோன்றுமே செங்கட்
சினமால் பொருத களத்து'

என்னும் பாட்டுப் போர்க்களத்தின் தோற்றத்தைக் கண்ணடி என மெய்ம்மைவிளங்கக் காட்டுகின்றது. 'யானைகள் அரசருடைய குடைகளை முருக்கிப்பாய்தலால், எவ்விடத்தும் பிணங்கள் பிறங்கித் தச்சனுடைய தொழில்நிகழும் இடம்போலத் தோன்றும்' எனவே போர்க்களத்து வீழ்ந்த பிணக்குவியல்களும் அவை தச்சன்பள்ளியிற் பொருள்கள்போல ஆங்காங்கு முறையின்றிக்கிடக்கின்றமையும் நன்குபுலனாகின்றன. தச்சனுடைய படைகள் அவன் பள்ளியில் ஆங்காங்குக் கிடப்பனபோலப் போர்க்களத்தும் பல வகைப் படைகள் கிடப்பனவாம். தச்சனதுபள்ளியிற் பலரும் வேலைபுரிவார் உளராதல்போல ஞாட்பினும் பலவீரர் போர்செய்வார் உளராதலும் உவமைச்சிறப்பாற் பெறப்படும். ஆகவே, போர்க்களம் தச்சனதுபள்ளியையொத்துத் தோன்றுவதாயிற்றென்க.

'வெள்ளிவெண் ணாஞ்சிலான் ஞால முழுவனபோல்
எல்லாக் களிறு நிலஞ்சேர்ந்த' (களவழிநாற்பது)

என்னும் உவமை யானைகள் போர்க்களத்துத் தம் கொம்புகள் நிலத்தூன்ற வீழ்ந்துகிடந்தமையைப் புலப்படுக்கின்றது.

இத்தகைய உவமைகள் கற்பார்க்குக் காட்சியுணர்வுபயந்தாற்போலும் பெற்றிமையை அளிப்பன.

கம்பராமாயணத்துப் போந்த உவமங்கள் பொருள்புலப்பாட்டை நன்கு உறுத்தி எத்துணைச் செவ்வி திகழநிற்கின்றன? என்பது சிறிது விளக்கப்படும்.

'கருமுகிலானது தாமரைச்செறிவு தன்மாட்டுத் திகழப்பெற்றுச் சூரியசந்திரர்களாகிய இருசுடரையும் இருபாங்கரினும் ஏந்திக்கொண்டு திருமகளொடும் பொலிய ஓர் செம்பொற்குன்றின்மேல் வருவதுபோல் திருமால் கருடன்மீது வந்துதோன்றினான்' என்பதை,

'கருமுகில் தாமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினன்'

என்னுஞ்செய்யுள் எவ்வாறு கூறுகின்றது பாருங்கள்.

இதனுள் திருமாலினது கரியநிறத்தினைமட்டுமேயுடைய மேகம் அவனது சங்குசக்கரங்களைப் பெருமையாலும் மலைபோன்ற வடிவுடைய கலுழனைப் பெருமையாலும் அவற்றிற்கேற்ப முறையே இருசுடரும் செம்பொன்மலையும் புலவரால் அதற்கு ஏற்றிக் கூறப்பட்டன. இது இல்பொருளுவமமாயினும், திருமாலின் வரவின் மாட்சியை நன்கனம் தெரிக்கின்றது. இங்ஙனம், பொருள்புலப்பட வருவுழி உவமத்தை விகாரப்படுத்து அமைத்தலும் தழுவப்பட்டு வருகின்றது. எனவே இது விகாரம்பற்றிவந்த இல்பொருளுவமையாயிற்று. எடுத்துக்கொண்டபொருளைப் புலனுறுத்தலே கருத்தாதலால், இல்பொருள் விகாரம் முதலியன புலவராற் கொள்ளப் படலாயின.

வசிட்டன் தயாதனைநோக்கி, 'நின்புதல்வனை விசுவாமித்திரனொடும் உய்த்தி; அதனால் அவன் அளவில்விஞ்சைகளைப் பெற்று மீள்வன்' என்று கூறுமிடத்து,

'பெய்யு மாரியாற் பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய் முடுகு மாறுபோல்
ஐய! நின்மகற் களவில் விஞ்சைவந்
தெய்து காலமின் றெதிர்ந்த தென்னவே'

எனக்கம்பர்கூறிய நயம் அறிஞருள்ளத்தைக் கவராதுவிடுங்கொல்?

கம்பர் இராமனது கடவுட்டன்மையைப் புலப்படுத்துமிடங்களுள் இதுவுமொன்று. 'பெய்கின்ற மழையால் பெருகிய வெள்ளம் கடலின்கண் விரைந்துசெல்லுமாறுபோல ஐயனே! நின்மகற்கு அளவில்லாத விஞ்சைகள் வந்து எய்துதற்குரிய காலம் இன்று எதிர்ந்தது' என்பதனாற் பெறப்படும் நுண்பொருளை யாயின், உவமச் செவ்வி ஒளிரும். இதனுள், 'பெருகுவெள்ளம்' என்றமையின்,

## செண்பகவிநாயகர்வணக்கம்.

கங்கையா ராம்பலைப்பூங் கவுரிநுதற்
சிந்துரத்தைக் கயிலை யாளி
செங்கையார் மாதங்கத் திருமுனியைத்
தேவேந்தர் திக்கு வேந்தர்
பங்கயா சனர்முதலோர் முடிமலர்த்தும்
பியைவலவை பருவப் பாரக்
கொங்கையார் களபத்தைச் செண்பகக்குஞ்
சரத்தைமனக் கூடஞ் சேர்ப்பாம்.

கங்கையார் ஆம்பலை-(1) கங்காதேவியாருடைய யானை(முகக்குழந்தை)யை. (2) கங்கையாற்றில்தங்கிய அல்லிமலரை. கங்கை – விநாயகருக்கு மாற்றாந்தாய். ஆர்-மரியாதைப்பன்மைவிகுதி; தங்குகின்ற. ஆம்பல்-யானை; அல்லி.

பூங் கவுரி நுதற்சிந்துரத்தை – (1) அழகிய உமாதேவியின் தலை(ப்பிள்ளையான) யானை(முகப்பிள்ளை)யை; (2) அழகிய உமாதேவியின் நெற்றித் திலகத்தை. பூங்கவுரி - அழகிய பார்வதி. நுதல் - தலை (தமிழகராதி); நெற்றி. சிந்துரம் - யானை; திலகம் (தமிழகராதி).

கயிலையாளி செங்கை ஆர் மாதங்கத் திரு முனியை – (1) கயிலாசநாதருடைய சிவந்தகைகளில்தங்கிய பெருமைபொருந்திய பொன்போன்ற (அருமையான) அழகிய யானைக்கன்றை; (2) கயிலாசநாதருடைய சிவந்தகையில் தங்கிய பொன்மயமான மேருமலையாகிய அழகிய வில்லை. கயிலையாளி - கயிலாசமலையை ஆள்பவர் - சிவன். மா - பெருமை. திரு - அழகு. முனி - யானைக்கன்று; வில்.

தேவேந்தர் திக்குவேந்தர் பங்கயாசனர் முதலோர் முடிமலர்த் தும்பியை—(1) இந்திரன் (முதலிய எட்டுத்)திக்குப் பாலகர், தாமரைமலரை ஆதனமாகவுடைய (பிரமதே)வர் முதலியோர்களுடைய தலைகளின்(மேல் அணிந்த) மலர்(மாலை)களின்மேல் (சூடப்பெற்ற திருவடிகளையுடைய)யானை (முகமூர்த்தி)யை; (2) இந்திரன் (முதலிய) திக்குப்பாலகர் பிரமதேவர் முதலியோர் முடி(யில் அணிந்த) மலரில் உள்ள வண்டை. தே - தெய்வம். பங்கயம் - தாமரைப்பூ. தும்பி - யானை; வண்டு.

வலவை பருவப் பாரக் கொங்கை ஆர் களபத்தை—(1) வல்லவையின் இளமையும் கனமுமான தனங்களிற் பொருந்திய யானை (முகமூர்த்தி)யை; (2) வல்லவையின் இளமையும் கனமுமான தனங்களிற்பொருந்திய கலவைச் சந்தனத்தை. வலவை - வல்லவை - விநாயகரின்தேவி. பருவம் - இளமை. பாரம் - கனம். களபம் - யானை; கலவைச்சந்தனம்.

செண்பகக்குஞ்சரத்தை – செண்பகயானையை – (யானைமுகமுடைய) செண்பகவிநாயகரை.

மனக்கூடம் சேர்ப்பாம் - மனமாகிய கூடத்திற் சேர்ப்போம். மனமாகிய ஒருகூடத்தே நதிசரம் (- ஆற்றுச்சார்பாகப் பிறந்த யானை), கிரிசரம் (-மலையிற் பிறந்த யானை) முதலிய பலவகையானைகளைக் கட்டுவோம் என்றும் கொள்ளுமாறு கூறிய நயம் உவகைவிளைக்கின்றது. 'கங்கையார் ஆம்பல்' என்றது நதிசரத்தை. 'கயிலையாளி...மாதங்கத்திருமுனி' என்றது கிரிசரத்தை.

மேலேயுள்ள (1) அடையாளமிட்டவை செம்பொருளையும் (2) அடையாளமிட்டவை தொனிப்பொருளையும் உணர்த்துவன. ஆசிரியர் யானைமுகமுடைய செண்பகவிநாயகரை யானையெனக் கொண்டு, யானையேயன்றி வேறுபொருளையும் உணர்த்தும், ஆம்பல், சிந்துரம், முனி, தும்பி, களபம் என்ற *பரியாயப்பெயர்களை அவைகளுக்கு எற்ற † அடைகொடுத்து இனிய பொருத்தமான தொனிப்பொருள் பயக்கும்படி விநோதமாகப் புணர்த்திருப்பது ஊன்றிநோக்கி உவத்தற்குரியது. (3)

சண்முகக்கடவுள்வணக்கம்.

வேறுமுகந் தொறுந்தோறும் பிறந்துழலும்
செனனவிடாய் விடுப்ப மூலச்
சேறுமுக மாயைமலங் கழியவிரு
வினைப்பழைய தீட்டுந் தீரக்

---

* பரியாயப்பெயர் - ஒருபொருட் பல்பெயர்.

† அடை - விசேடணம்.

கூறுமுகந் தொறுமகரக் குழைதாவி
வள்ளிதெய்வக் கொடிகட் சேல்பாய்
ஆறுமுகம் பெற்றகொற்றத் தானந்தக்
கடல்பரவி யாடல் செய்வாம்.

வேறு முகம் தொறும் தோறும்-வெவ்வேறுன பல இடங்களிலும். முகந் தொறும் முகந்தோறும்' என்பது 'முகந்தொறுந்தோறும்' என்று சுருக்கிக் கூறப்பட்டது. இங்கு முகம் என்றது பிறப்புக்கிடமாகிய வேறுவேறுன பல வகை யோனிகளை. "புல்லாகிப்பூடாய்.......எல்லாப்பிறப்பும் பிறந்திளைத் தேன்" என்ற மாணிக்கவாசகர்திருவாக்கு இங்கு நோக்கத்தகும். செனன விடாய் - ஆதியான்மிகம் ( - ஆன்மாவினுல்வருவது), ஆதிபௌதிகம் (-பிருதிவி முதலிய பூதங்களால் வருவது), ஆதிதைவிகம் (-தெய்வத்தால் வருவது) என்னும் தாபத்திரயம் (-மூவகைத்துன்பங்கள்). மூலச்சேறும் உக - (ஆணவமலம், கன்மமலம், மாயாமலம் என்ற மும்மலங்களுள்) மூலமலம் என்ற ஆணவமலமாகிய சேறும் (காய்ந்து பொருக்காகி) உதிர்ந் தொழிய. மாயை மலம் கழிய - மாயாமலம் நீங்க. இருவினைப் பழைய தீட்டும் தீர - (பிறப்புக்குக்காரணமான) நல்வினை தீவினையாகிய பழையதீட் டும் நீங்க. தீட்டு - பல தீட்டுக்கு ஒரு முழுக்கு என்ற பழமொழியில் உள்ள தீட்டு. தீட்டு, ஆசூசமென்றும் ஆசௌசமென்றும் சொல்லப்படும். முகம் தொறும் மகரக்குழைதாவி வள்ளி தெய்வக்கொடி கண் சேல் பாய் - ஒவ் வொருமுகத்திலும் ( காதுக்கு அணியாகிய ) மகரக்குழைகள் அசையப் பெற்று வள்ளியம்மை தெய்வயானை (யென்ற) தெய்வக்கொடி (போன்ற மனைவியர்) களின் கண்களாகிய சேல்கள் பாய்கின்ற (இருவர்களும் இடை விடாது நோக்கிநோக்கி இன்பமுறுகின்ற). ஆறுமுகம்பெற்ற கொற்றத்து ஆனந்தக்கடல் பரவி ஆடல்செய்வாம் - ஆறுமுகமுள்ள வெற்றியுடைய இன் பக்கடலை (முருகக்கடவுளை) வணங்கி(ப் பத்திபரவசராய் ஆனந்த)க்கூத்தாடு வோம்.

'ஆனந்தக்கடல்' என்பதில் உள்ள, கடலுக்குப் பொருத்த மாக, 'மகரக்குழைதாவி', 'சேல்பாய் ஆறுமுகம்பெற்ற', 'ஆடல் செய்வாம்' என்பவைகளைக்கொண்டு மகரமீன்களும் சேல்மீன்க ளும் தாவுகின்ற ஆறு சங்கமமாகின்ற புண்ணியஸ்நானகட்ட

மாகிய கடலிடத்திலே நீராடல் (ஸ்நானம்) செய்வோமென்று பின்னிரண்டடிகளுக்குப் பொருள்கொள்ளல் பொருந்தும்.

ஆறுமுகம் பெற்ற ஆனந்தக்கடல் பரவி ஆடுவார்க்கு பல பிறப்புப் பிறத்தலால் உண்டாம் துன்பமும் ஆணவமலச்சேறும் மாயாமல மாசும் கன்மமலத் தீட்டும் நீங்குமென்பது கூறப்பட்டது. இந்தப்பாட்டில், உடலைப்பற்றிய வெப்பும் (-தாபமும்) சேறும் மலமும் தீட்டுமாகிய இவற்றை நீக்கும் நீர்க்கடலினும், உயிரைப்பற்றிய விடாயும் சேறும் மலமும் தீட்டுமாகிய இவற்றை நீக்கும் ஆனந்தக்கடலாகிய சண்முகப்பெருமானுடையபெருமை நன்குதோன்ற விரித்த கவிசாதுரியம் உணர்ந்துணர்ந்து உண்மகிழத்தக்கது. (4)

சரசுவதி இலக்குமி வணக்கம்.

எண்கமலக் கரஞ்சலிப்ப ஒருகமலத்
தயன்பிறப்பி லெழுதா வண்ணந்
தண்கமலப் பதஞ்சிரமேல் வைத்தருள்வார்
குற்றாலத் தமிழ்நூல் வாய்ப்பக்
கண்களெனுங் கருங்கமலங் கரங்களெனுஞ்
செங்கமலங் கவினப் பூத்து
வெண்கமலத் திருந்தாளைச் செங்கமலத்
திருந்தாளை வேண்டல் செய்வாம்.

எண்கமலக்கரம் - எட்டுத் தாமரைமலர்போன்ற கைகள். ஒரு கமலத்து அயன் - ஒப்பற்ற தாமரைமலரிலிருக்கின்ற பிரமன். பிறப்பில் எழுதா வண்ணம் - அடுத்த பிறப்பு இன்ன பிறப்பாகக் கடவதென்று (தலையில்) எழுதாதபடி (-எழுதக்குறித்ததை எழுதாமல் தடுக்கும்படி). தண் கமலப்பதம் சிரமேல்வைத்து அருள்வார் - குளிர்ச்சியுடைய தாமரைமலர்போன்ற பாதங்களைத் தலைமேல்வைத்துத் திருவருள்புரிபவராது - சிவனடியார்கள் மோட்சபக்குவத்தையடைந்தபோது குருவாக மானுடவடிவங்கொண்டு

வந்து திருவடிதீட்சையாகத் தம் பாதங்களை அவர்கள் தலைமேல்வைத்து அவர்கள் இனிப் பிறவாதபடி மோட்சபதவியை அடையச்செய்தருள்பவ ராகிய சிவபெருமானது. குற்றாலத் தமிழ்நூல் வாய்ப்ப-குற்றாலத்தலமான் மியத்தைத் தமிழிற்கூறும் நூல் (ஆகிய குற்றாலத்தலபுராணம்) நன்கு அமையும்படி. கவினப்பூத்து - அழகாக மலர்ந்து. வெண்கமலத்திருந்தாள் - சரசுவதி. செங்கமலத்திருந்தாள் - இலக்குமி.

இல்லாத பொருளாகிய கரியதாமரைமலரை உவமானமாக எடுத்தாளுதலால், 'கண்களெனுங்கருங்கமலம்' என்பது இல்பொரு ளுவமை.

தம்(-பிரமாவின்) ஐந்து தலைகளுள் ஒன்றைக் கிள்ளியொழித்த சிவபெருமானுடைய பாதங்களை அப்புறப்படுத்தப் பிரமதேவர் துணியாமையும், தலைமேலுள்ள பாதங்களை அப்புறப்படுத்தினு லன்றித் தலையிலெழுதமுடியாமையும், பிறக்கும்படி, சிவபாதத்தால் மூடப்பெற்ற தலையிலெழுதுதல் அசாத்தியமாகவே பிறப்பற்று வீடடைதல் சித்தித்தலும் ஊகித்துணர்ந்துவக்கும்படி "அயன் பிறப்பில் எழுதாவண்ணம் தண்கமலப்பதம் சிரமேல்வைத்தருள் வார்" என்றார்.

"கண்களெனுங் கருங்கமலம் கரங்களெனும் செங்கமலம் கவினப்பூத்து" என்ற விசேடணம், "வெண்கமலத்திருந்தா" ளென்ற சரசுவதியை விசேடிப்பதன்றிச் செங்கமலத்திருந்தா ளென்ற இலக்குமியையும் விசேடிக்கும்படி ஆசிரியரால் அமைக்கப் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது. (5)

[தொடரும்]

# பண்டைத்தமிழர்

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.

கூச-ஆம்பக்கத்தொடர்ச்சி.

## எழுத்துமுறையும் திருந்திய ஆரியமும்

ஆரியருக்கு எழுத்துமுறையை அளித்தவர்களும் தமிழரே என்று ஒருவாறு துணிந்துசொல்லலாம். மொஹெஞ்சோதரோ, ஹரப்பா முதலிய இடங்களிலுள்ள சித்திரலிபி எனும் உருவெழுத்துக்கள் அறியப்படுமுன், முதலில் வியாபாரக்கணக்குகளை எழுதிவைப்பதற்காகத் தமிழரும் அப்பால் ஆரியரும் பினீசியரிடமிருந்து எழுத்துமுறையைப் பெற்றுக்கொண்டனர் என்ற ஒரு எண்ணம் ஆராய்ச்சியாளருக்குள் இருந்தது. இன்றைக்கு அப்படியல்ல. தமிழர் கி. மு. மூவாயிரம் ஆண்டுகளுக்குமுன்னரும் உருவெழுத்துமுறையைக் கொண்டிருந்தார்கள் என்பது வெளிப்படவே, அதில் நின்றுதான் இந்தியாவிலே பிற்காலத்துவழங்கிய லிபிகளெல்லாம் மருவிவந்திருக்கவேண்டுமென்று காணப்படலாயிற்று. தற்கால இந்தியலிபிகளுக்குத் தாய் எனப்படுகின்ற பிராமிலிபி சிந்துவெளியாரது உருவெழுத்திலிருந்துதான் பிறந்திருக்கவேண்டும். இதுவரையில் இரண்டொரு பிராமியெழுத்துக்களுக்குச் சிந்துவெளி உருவெழுத்து உற்பத்திகாட்டக்கூடியதாயிருக்கின்றது. அவ்வுருவெழுத்துப் படிப்படியாய் அடைந்துகொண்டுவந்த மாற்றங்களுக்கு ஒருநாள் சாட்சி கண்டுபிடிக்கப்படும்போது சிந்துவெளியுருவெழுத்தே பிராமிக்கு மூலம் எனும் உண்மை நன்ருக நிச்சயிக்கப்படும்.

தமிழும் வடமொழியும் எனும் இருபாஷைகளும் ஒன்றினுல் ஒன்று திருத்தப்பாடடைந்தன என்பது உண்மையன்றி, வடமொழியால் தமிழே திருத்தமடைந்தது என இதுகாறும் சிலர் எண்ணியது தவருகும். பிற்காலத்து ஸம்ஸ்க்ருதம் பெருந்தொகையான சொற்களையும் சில நவமான இலக்கணத்துறைகளைத் தானும் தமிழுக்குக் கொடுத்தமை உண்மையே. இது தமிழ்

இடைக்காலத்திலே பராதீனப்பட்டு நெடுநாள் இலக்கியவளர்ச்சியில்லாமற் கிடந்தமையால் வந்த கேடு. தமிழ் இலக்கணங்களுள் முந்தியனவாகிய அகத்தியமும் தொல்காப்பியமும் ஸம்ஸ்க்ருத வியாகரணங்களின்வழியே இடைக்காலத்தில் அமைக்கப்பட்டன. ஆயின் ஆதியிலே இருக்குவேதகாலத்து வடமொழியிலும் தமிழ்க்கலப்புத் தோன்றுமலில்லை என்பதையும், தமிழோடுகலந்துதான் அது ஸம்ஸ்க்ருதமாக, (அதாவது திருந்திய மொழியாக) வந்தது என்பதையும் நாம் மறந்துபோகவொண்ணாது. இருக்குவேதத்திலேயே ஆரியருடையவையான மிகப் பழைய உருவங்களோடு பிறபாஷைகளோடு மருவிநிற்கும் உருவங்களும் காணப்படுகின்றன என்பர் ஆன்றோர்.* பிறபாஷைகள் எனும்போது அன்னோர் திராவிட மொழிகளோடு அவற்றிற்குச்சார்பான முண்டா அல்லது கோள மொழிகளையும் கருதுவர். ஆயினும், முண்டாமொழிகளையும் அடக்கி மேலிடத்தைக்கொண்ட தமிழையே நாம் இங்கு எடுத்துக் கொள்ளுகின்றோம். அங்ஙனமாக, ஒருசாராருடையதும் அக்காலத்தாருடைய தேவைகளுக்குரியவைகளைமட்டும் விரித்ததுமான இருக்குவேதபாஷை விரிந்துவரவேண்டியகாலையில், பழைய ஆரியச்சொற்களிலிருந்து உண்டான புதிய உருவங்களைத்தவிர, வடஇந்தியாவின் பழங்குடிகளுள் விசேஷித்தோரான திராவிடரின் சொற்களும் பலநூற்றுக்கணக்காய் எடுத்துச் சிறிது திரிபுகளோடு வழங்கப்படலாயினமை ஆச்சரியமன்று. விசேஷமாய் மூர்த்தன்னியம் (cerebral) என்று சொல்லப்படுகிற டகர ணகர ளகரங்கள், ஆரியமொழிகளுக்கு இல்லாதன வடமொழியில் இடம் பெற்றது இந்தியப்பழங்குடிகள்மூலமாகவே என்பர் மொழிநூலோர்.† கிற்றேல் எனும் அறிஞர் (Rev. F Kittel) தமது கன்னட இங்கிலீஷ் அகராதியில் நானூற்றுக்கு மேற்பட்ட திராவிடச் சொற்கள் ஸம்ஸ்க்ருதத்தில் சென்றடைந்திருப்பதாக விளக்குகிறார்.

---

* E. G. Jules Bloch in bulletin of the school of Oriental studies V. pp 720 & Seq.

† இருக்குவேதகால வடமொழி ஒலிகள் இந்தியாவில் அடைந்து கொண்ட மாற்றங்களை Macdonell Vedic Grammar p. 6-ல் காண்க.

எமது சொற்பிறப்பு ஒப்பியலகராதியில் அதினும் பன்மடங்கான சொற்கள் திராவிடத்திலிருந்து வடமொழியில் உருமாறிநிற்கின்றமையைக் காட்டிவருகின்றோம். உதாரணமாய் ஹாலு எனும் வடசொல், பல்லு எனும் தமிழிலிருந்து கன்னடத்தில் உண்டான ஹல்லுவின்மூலம்வந்தது. தமிழ்ப்பகரம் கன்னடத்தில் ஹகரமாய் மாறிவரும். ஸம்ஸ்க்ருத ஆரத்தி, ஆலாட்டுதல் எனும் தமிழின் மரூஉ. ஆலிங்கனம் தமிழ் அழுங்குகலிலிருந்து வந்த வடசொல். தேகலி (dehali) தமிழ் இடைகழி. ஹேரம்ப என்றது தமிழ் எருமை. இவற்றையும் இன்னும் பலநூறு சொற்களையும் எமது அகராதியிற் பார்த்து உணர்ந்துகொள்க.

இன்றைக்கு வடஇந்தியாவின் மாகதி, வங்காளி முதலான பாஷைகளை நோக்கும்போது அவைகள், இலங்கையின் சிங்களத்தைப்போல, முழுதும் தமிழ்வசனக்கட்டுள்ளவைகளாய்க் காணப்படுகின்றன. சொற்கள் பெரும்பாலும் வடமொழியும் பாலியுமாய் இருப்பினும், இலக்கணமோ ஏறக்குறையத் தமிழைப்போன்றது. இதற்கு நியாயமென்னவெனில், வடஇந்தியப்பாகதங்கள் பழைய ஸம்ஸ்க்ருதத்தைப்போல ஆரியபாஷைகளல்ல, இந்து ஆரிய பாஷைகளாம். அதாவது, இந்தியாவின் பழைய தமிழ்ப்பாஷையை அடிப்படையாய்வைத்துக்கொண்டு ஆரியச்சொற்களை மிக மேற்கொண்டவைகளாம். ஆகவே, வடஇந்தியப் பாகதங்கள் எல்லாவற்றிலும் தமிழ்ச்செல்வாக்கே பிரகாசிக்கின்றது. அதுமட்டோ! பிற்கால ஸம்ஸ்க்ருத வசனக்கட்டிலும் அந்தச் செல்வாக்கு இடையிடையே எதிர்ப்படலாம். உள்ளபடி இருக்குவேதத்துக்குப் பிற்பட்ட ஸம்ஸ்க்ருதநூல்கள் பல ஆரியரோடு கலந்துகொண்ட திராவிடர்களாலேதான் எழுதப்பட்டன என்பதை நாம் குறிக்கொள்ளாதிருக்கப்படாது. பழையநாட்களிலே தத்துவசாத்திரயுக்தமான தர்க்கங்களில் விசேடஅறிவுபெற்றிருந்த சத்திரியர் என்னப்பட்ட அரசர்கள் ஆரியப்பிராமணருக்கும் தத்துவஉபதேசம் செய்ததாக வாசிக்கின்றோம்.* அந்தச் சத்திரியர்கள் ஸ்ம்ஸ்க்ருதங்கற்ற முழுத்தமிழர் அல்லது தமிழ்க்கலப்புள்ளவர்களாவர்

* Cf Muir Original Sanskrit Texts Vol. I Ch IV.

என்பது ஊகிக்கக்கிடக்கின்றமையும் இங்கே குறிக்கத்தகும். நமது காலத்தில் நம்முள்ளே பலர் ஆங்கிலம் படித்து அதில் நூல்களும் இயற்றுவதுபோல, அக்காலத்தில் ஆரியநாட்டுத் தமிழர் வடமொழியில் நூலெழுதியமை பொருத்தமற்றதாகாது. பல ஸம்ஸ்க்ருத நூல்களைத் தமிழரே எழுதினரென்று தற்கால ஆராய்ச்சியாளர் எண்ணுகின்றனர். வடமொழி ராமாயணத்தை இயற்றிய வான்மீகிமுனிவருமே தமிழரென்பதை மதுரைச் செந்தமிழ்ப் பத்திராசிரியர் நன்றாக விளக்கியிருக்கின்றார். * மகாபாரதம் கூறுகின்ற கௌரவரும் பௌரவரும் திராவிடரேயன்றி ஆரியர் அல்லர் என்பது ஆராய்ச்சியாளர் பலர்கருத்து. ஆகவே, பல கை சேர்ந்து ஆக்கிய அந்த மகாநூலில் தமிழருடையபங்கு சிறிதாவது இராமற் போகாது. பிரமசூத்திரமாபாடியம் வரைந்த சங்கராசாரியர் யார்? அவரும் தமிழ்நாட்டவரே என்பது யாவரும் அறிந்தது. சைவ ஆகமங்களெல்லாம் தமிழ்நாட்டில் தமிழரால் வடமொழியில் புனையப்பட்டன. புராணங்களுள்ளும் பல தமிழரால் எழுதப்பட்டன; அல்லது தமிழிலிருந்து வடமொழியிலே திருப்பப்பட்டன. நாம் இதனை இருந்து வரைகின்ற நல்லூரில்நின்று இன்றைக்குச் சில நூற்றாண்டுகளின்முன் தென்னிந்தியாவுக்குச்சென்று அங்கு வசித்தவரான ஞானப்பிரகாசாரியர் வடமொழியில் எழுதிய "சிவஞானபோதவிருத்தி" இப்போது எமது கண்முன்னே இருக்கின்றது. இவ்வாறே தமிழும் தமிழரும் ஸம்ஸ்க்ருதத்துக்குச் செய்த உதவி பெரிதேயாம்.

---

## சமயவழிபாடும் தத்துவசாத்திரமும்

ஆரியருடைய பழைய நூலும் அன்னோரது முற்காலக் கொள்கைகளுக்கு நற்சான்றுமாகிய இருக்குவேதத்தில் நாம் காண்கின்றபடி, அவர்களுடைய சமயவழிபாட்டின் அடிப்படையில் ஏகதேவக் கொள்கையே இலங்குகின்றது. ஆயினும், அவர்கள் "கட்புலனுகாக்கடவுளைக்காட்டும் சட்டகம்போல" இந்திரன் வருணன் அக்கினி ஆதிய பௌதிகதெய்வங்களை ஒன்றன்பின் ஒன்றாய்க் கைக்கொண்டு அவை ஒவ்வொன்றுக்கும் முதன்மைகொடுத்து ஏக

* செந்தமிழ் Vol. XXXVI, பக் 49. முதல்

தெய்வம்போலப் போற்றுவதைக் காண்கின்றோம். அவர்களுடையது பலதெய்வவழிபாடு அல்ல; வெவ்வேறு தனித்தெய்வவழிபாடு எனல் தகும்.* ஆயின், அன்னோர் மாறிமாறிப் போற்றிக்கொண்டுவந்தவைகளோடு வேறுதெய்வங்களையும் சேர்த்து அனைவரையும் ஒன்றுபடுத்தும் வமிசவரலாறுகள் அமைக்கவும் புராணக்கதைகள் கட்டிவைக்கவும் துணைபுரிந்தவர்கள் தமிழரேயாவர். ஆரியர் தாங்கள் முன் அறிந்திராத சிவபிரானைத் தமிழரிடத்தில் நின்று கிரகித்துக்கொண்டனர் என்பது சகல ஆராய்ச்சியாளரும் சம்மதித்துக்கூறுவதொன்று. காளி, துர்க்கை, உமை என்று பேதித்துவழங்கும் மகாதேவியென்ற தெய்வமும் தமிழர் மத்தியதரைக்கடலோரங்களிலிருந்து கொண்டுவந்ததேயன்றி ஆரியருடையதன்று. இருக்குவேதம் 22-ம் சூக்தம் முதலியவற்றிலே சொல்லப்பட்ட இந்திரன், வருணன், அக்கினி ஆதியோருடைய துணைவிகள் தெய்வத்தன்மையுடையவர்களாய்ப் போற்றப்பட்டிருப்பினும், அவர்கள் தமிழருடைய மகாதேவியைப் போலத் தலைமைவகித்தவர்களல்லர். ஆரியர் தமிழரின் பெண்தெய்வத்தை மேற்கொண்டநாளில் அவர்களது சக்திக்கொள்கையையும் பெற்றுக்கொண்டார்கள். இந்துமதங்களுக்கெல்லாம் பொதுவான அக்கொள்கைமுழுதும் தமிழருடையதேயாம். அது ஒருபுறத்தில் அரோசிகமான பல துராசாரங்களுக்கு இடமான சத்திபூசையாய்வர, மறுபுறத்தில் மிக்க அழகுபொருந்திய அருட்போதகத்துக்கும் பின்னர், பக்திமார்க்கத்துக்கும் வழிதிறந்துவிட்டது. மேலும், பசுவோம்பல், நந்திவழிபாடு, நாகவழிபாடு எனும் இவைகளும் ஆதிகாலந்தொட்டுத் தமிழருக்குத்தான் சிறப்பானவை; பின் சிறிதுசிறிதாய் ஆரியர்சமயத்தில் இடம் பெற்றுக்கொண்டன. ஆலயநிர்மாணம், விக்கிரகவமைப்பு, தீபதூபங்களோடுகூடிய பூசைச்சடங்குகள், ஊர்வலம் முதலியனவெல்லாம் தமிழருடையன. இவைகளை அவர்கள் சுமேரியர் எகிப்தியரோடு வதிந்திருந்த நாட்களில் அன்னாரோடு பயின்று பின் இந்தியாவுக்குக் கொண்டுவந்தனர் என்பது ஆராய்ச்சிவல்லோரது

* அதனை heno-theism என்றார் மாக்ஸ்முல்லர்.

அபிமதம். பூசை (பூஜா) என்ற சொல்லும் தமிழன்றி வடமொழி யல்ல என்பது பலர் கருத்து.

ஆரியருடைய தற்காலச் சரியை கிரியைகள் தமிழருடையன வாதலோடு, யோகமும் அவர்களுடையதே என்பது இன்றைக்கு மொஹெஞ்சோதரோவிலேகண்ட சில ஏதுக்களாற் பெறப்படுகின்றது. மந்தைகளை மேய்த்துக்கொண்டும் சூறையாடிக்கொண்டும் திரிந்த ஆதி ஆரியர் யோகஞ்சாதிக்கும் போக்குடையவர்களாக வில்லை. நிலையூன்றிய சீர்திருத்தத்தில் மேற்பட்டிருந்த தமிழரே அதனை ஆதியிற் பயின்றனர். மேலும், இந்தியாவின் அறுசமயங் கட்கும் அத்திவாரம்போல் நிற்கும் மறுபிறப்புக்கொள்கையும் ஆரியரதன்று; தமிழருடையதே எனல் தகும். ஆரியர் உத்தமநோக் குள்ளவர்கள். அவர்கள் பூலோகத்திலே தெய்வங்களைத் தொழுது பாதகங்களைவிலக்கிச் சீரும் சிறப்புமாய்வாழ்ந்து பின் முடிவுற்ற காலம் பிதிரர்களோடு சுகம் துய்க்கலாம் என்ற கருத்துள்ளோர்; ஆகவே, மீண்டும் ஒருமுறை பிறந்துவரலாம் என்று எண்ணவில்லை. ஆழ்ந்து ஆழ்ந்து சிந்திக்கும் போக்குடையோராயிருந்த தமிழர், தங்கள் முன்னோரான எகிப்தியரைப்போல, ஆன்மாக்கள் மறு படியும் எழுதரம் பிறக்கும் என்று எண்ணினார்கள். அவ் வெண்ணம் ஆரியரையும் பற்றிக்கொண்டது. அதுதான் இந்தியாவிலே கிளைத்தெழுந்த பல தரிசனங்களும் அவற் றோடு பௌத்தமும் உண்டாவதற்கு ஒரு தனித்த ஏதுவாயிற்று; அதுதான், இந்தியரை, பிறவிப்பெருங்கடலை நீந்துவது எவ்வாறு? என்ற விசாரத்தில் ஆழ்த்தி, அவர்கள் உலக வியவகாரங்களைத் தேடாமல் இனிப் பிறவாதிருக்க உதவும் சூழ்ச்சிகளைச்செய்வதில் தங்கள் வாணாளைப் போக்குவித்தது; அதுதான் அவர்களை மனந்தடுமாறச்செய்யும் தத்துவ ஆராய்ச்சியில் மேம்பட்டோரென உலகம் முழுதும் மதிக்கச்செய்ததன்றோ!

[தொடரும்]

---